<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.334/2025 | Date | : 04.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : சரண்யா | Calling | : |
| Husband Name | : அஜித்குமார் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம், மூலப்பாளையத்தில் வசித்து கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் தர்மபுரி மாவட்டம், ஏர்கோல்பட்டி, மஞ்சாரஹள்ளி கிராமம் ஆகும். கடந்த 21-04-2025 ம் தேதி, பிற்பகல் 12.00 மணிக்கு எனது கணவர் அஜித்குமார் அவரது தாய் தந்தையை பார்ப்பதற்கு ஈரோட்டில் இருந்து தர்மபுரி நோக்கி Splendor இருசக்கர வாகனத்தில் புறப்பட்டார். மதியம் சுமார் 02.00 மணியளவில் நான் எனது கணவருக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டேன் அவர் போனை எடுக்காததால், அவரது தம்பி சிவனேசன், ஈரோட்டில் இருந்து புறப்பட்டு சென்றார்.

2) அவர் புறப்பட்டு சன்னியாசிப்பட்டி அருகே வந்தபோது எனது கணவரின் இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளாகி இருந்தது. அருகில் இருந்தவர்கள் சங்ககிரி அரசு மருததுவமனைக்கு சென்று பார்க்குமாறு சொன்னார்கள். அங்கு சென்று பார்த்தபோது எனது கணவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாக கூறினார்கள். அங்கு

சென்று எனது கணவரை பார்த்தோம். அவர் மயக்க நிலையில் இருந்தார். அதனால், போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், மேல்சிசிக்சைக்காக சேலம் நியூரோ பவுன்டேசன் மருததுவமனைக்கு அழைத்து செல்லும் வழியிலேயே எனது கணவர் இறந்துவிட்டார். பின்னர், எனது கணவரின் பிரேதத்தை, பிரேத பரிசோதனைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :–

1) போலிசார் என்னை எங்கு வைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சங்ககிரி அரசு மருத்துவமனையில் இரவு சுமார் 07.00 – 08.00 மணிக்கு விசாரித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எந்த வாகனம் மோதி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2) நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் ஒரு லாரி தான் என்றும், அது மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/–S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/–Saranya

# <u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.334/2025 | Date | : 04.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : சிவநேசன் | Calling | : |
| Father Name | : பெருமாள் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 04.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம், மூலப்பாளையத்தில் வசித்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் தர்மபுரி மாவட்டம், ஏர்கோல்பட்டி, மஞ்சாரஹள்ளி கிராமம் ஆகும். கடந்த 21-04-2025ம் தேதி, பிற்பகல் 12.00 மணிக்கு எனது அண்ணன் அஜித்குமார் எனது தாய் தந்தையை பார்ப்பதற்கு ஈரோட்டில் இருந்து தர்மபுரி நோக்கி Splendor இருசக்கர வாகனத்தில் புறப்பட்டார். இரவு சுமார் 07.00 மணியளவில் எனது அண்ணி எனது அண்ணனுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டபோது அவர் போனை எடுக்காததால், நான் ஈரோட்டில் இருந்து புறப்பட்டு சென்றேன்.

2) நான் புறப்பட்டு சன்னியாசிப்பட்டி அருகே வந்தபோது எனது அண்ணன் இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளாகி இருந்தது. அருகில் இருந்தவர்கள் சங்ககிரி அரசு மருததுவமனைக்கு சென்று பார்க்குமாறு சொன்னார்கள். அங்கு சென்று பார்த்தபோது எனது அண்ணனை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாக கூறினார்கள்.

அங்கு சென்று எனது அண்ணனை பார்த்தோம். அவர் மயக்க நிலையில் இருந்தார். பின்னர், மேல்சிசிக்சைக்காக சேலம் நியூரோ பவுன்டேசன் மருததுவமனைக்கு அழைத்து செல்லும் வழியிலேயே எனது அண்ணன் இறந்துவிட்டார். பின்னர், எனது அண்ணனின் பிரேதத்தை, பிரேத பரிசோதனைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u> :-

1) சங்ககிரி காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் இரவு சுமார் 07.00 மணிக்கு வந்து, விபத்து குறித்து கேட்டேன். சம்பவம் நடந்த மறுநாள் மீண்டும் கடந்த 22-04-2025ம் தேதி சங்ககிரி காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். போலிசார் எழுதி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

2) விபத்து எந்த வாகனம் மோதி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் ஒரு லாரி தான் என்றும், அது மோதி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sivaneshan